

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (15.07.2025) திருவண்ணாமலை வட்டம், பழையனூர் ஊராட்சியில் "உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தினை தொடங்கி வைத்து பல்வேறு துறைகளின் சார்பாக பயனாளிகளுக்கும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு ஊராட்சி ஒன்றியம் வேப்பூரில் நடந்த 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி மனுக்கள் பதிவு செய்யப்படுவதை பார்வையிட்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். உடன் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜே.எல். ஈஸ்வரப்பன், மாவட்ட ஆட்சியர் ஜெ.யு.சந்திரகலா, மாவட்ட ஊராட்சிகுழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, ஒன்றிய குழு தலைவர் புவனேஸ்வரி, துணைத் தலைவர் ஸ்ரீமதி, ஊராட்சி மன்ற தலைவர் ராமலிங்கம் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### இன்று தியாகிகள் தினம்

# தமிழ்நாடு அரசின் சார்பில் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவிப்பு!

## அமைச்சர் பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்!

சென்னை, ஜூலை 17 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் சார்பில், ஜூலை திங்கள் 17ஆம் நாள் தியாகிகள் தினம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

அமைச்சர் பெருமக்கள், தியாகிகளின் தினத்தை முன்னிட்டு, இன்று (17.7.2025 ) காலை 9.30 மணியளவில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தியாகி ஆர்யா (எ) பாஷ்யம், தியாகி சங்கரலிங்கனார், தியாகி செண்பகராமன் ஆகியோர்களின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்குபெற்ற தியாகிகளின் தியாக வரலாற்றை நினைவு கூறும் வகையில், சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் 2.10.1998 அன்று தியாகிகள் மணி மண்டபம் திறந்து வைக்கப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தியாகிகளைப் போற்றும் வகையில் (17.7.1999) அன்று தியாகி ஆர்யா (எ) பாஷ்யம், தியாகி சங்கரலிங்கனார் ஆகியோரின் மார்பளவுச் சிலைகளையும், 17.7.2008 அன்று தியாகி செண்பகராமன் அவர்களின் திருவுருவச் சிலையினையும் சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் திறந்து வைத்தார்கள்.

தியாகி ஆர்யா (எ) பாஷ்யம் அவர்கள் தஞ்சாவூர் மாவட்டம் மன்னார்குடி அருகேயுள்ள சேரன்குளத்தில், 1907 ஆம் ஆண்டு பிறந்து, மன்னார்குடியில் பள்ளிப்படிப்பையும் திருச்சி நேஷனல் கல்லூரியில் பட்டப்படிப்பையும் முடித்தார். இவர் இளம் வயதிலேயே இந்திய சுதந்திரப் போராட்டத்தில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டார். நீடாமங்கலத்தில் நடைபெற்ற மகாத்மா காந்தி அவர்களின் சொற்பொழிவைக் கேட்டு, இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்தவும் தன்னை தயார்படுத்திக் கொண்டார். நீடாமங்கலத்தில் நடைபெற்ற "சைமனே திரும்பிப் போ" என்ற போராட்டத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

சென்னை தலைமைச் செயலகம் இருக்கும் புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள கொடிக்கம்பத்தில் நள்ளிரவு நேரத்தில் பாதுகாப்புப் பணியில் இருந்த இராணுவ வீரர்கள் எவருக்கும் தெரியாமல் ஏறி பிரிட்டிஷ் கொடியான யூனியன் ஜாக்கை இறக்கி விட்டு, இந்திய தேசியக் கொடியை ஏற்றிய மாவீரர் தியாகி ஆர்யா (எ) பாஷ்யம் ஆவார்.

தியாகி சங்கரலிங்கனார் அவர்கள் விருதுநகரில் உள்ள மண்மலைமேடு கிராமத்தில் பெரிய கருப்பசாமி - வள்ளியம்மை தம்பதியினருக்கு 1895 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தார். 1914 ஆம் ஆண்டு பெண்கள் சமுதாய வளர்ச்சிக்கான சங்கத்தின் செயலாளராகவும், கதர் வளர்ச்சிக்கான பணியையும் மேற்கொண்டார். 1917 ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற சத்தியாகிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டமைக்காக 6 மாதம் சிறைத் தண்டனை பெற்றார்.

**79 நாட்கள் உண்ணாவிரதம்!**

1920 ஆம் ஆண்டு மூதறிஞர் இராஜாஜி அவர்களைச் சந்தித்து அவரை தனது குருவாக ஏற்றுக் கொண்டார். சுதந்திரத்திற்குப் பின் மொழிவழி மாநிலங்கள் அமைந்த போது சென்னை மாகாணம் என்ற பெயரை மாற்றி 'தமிழ்நாடு' எனப் பெயரிட வேண்டுமெனக் கோரி தியாகி சங்கரலிங்கனார் 79 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து, தமது 58ஆவது வயதில் உயிர் துறந்தார்.

தியாகி செண்பகராமன் அவர்கள் திருவனந்தபுரத்தில் 15.9.1891 அன்று பிறந்தார். பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் போது ஆங்கில அரசுக்கு எதிராகக் குரல் கொடுத்தார். தாய்நாட்டை வணங்கி 'ஜெய்ஹிந்த்' எனும் முழக்கத்தை முதன் முதலில் எழுப்பியவர் தியாகி செண்பகராமன் அவர்கள். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் உருவாக்கிய இந்திய தேசிய ராணுவத்திற்கு முன்னோடியாக இருந்த இந்திய தேசியத் தொண்டர் படையை உருவாக்கியவரும் தியாகி செண்பகராமன்தான். அவர் 26.5.1934 அன்று இயற்கை எய்தினார்.

இந்திய நாட்டின் விடுதலைக்காக அரும்பாடுபட்டு இன்னுயிர் நீத்த விடுதலைப் போராட்டத் தியாகிகள் சங்கரலிங்கனார், ஆர்யா (எ) பாஷ்யம், செண்பகராமன் ஆகியோரின் மாபெரும் தியாகங்களைப் போற்றும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் இன்று (17.7.2025) காலை 9.30 மணியளவில் கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் நடைபெறும் தியாகி கள் தின நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், சீர்மிகு பெருமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு மாலை அணிவித்து மலர் தூவி சிறப்பிக்கிறார்கள்.

---

## மதுரை வடக்கு மாவட்டம்

# அலங்காநல்லூர் கிழக்கு, அலங்காநல்லூர் மேற்கு, அலங்காநல்லூர் வடக்கு, அலங்காநல்லூர் தெற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் - மற்றும் ஒன்றிய பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் மதுரை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட,அலங்காநல்லூர் கிழக்கு, அலங்காநல்லூர் மேற்கு ஆகிய இரண்டு ஒன்றியங்கள், **அலங்காநல்லூர் கிழக்கு, அலங்காநல்லூர் மேற்கு, அலங்காநல்லூர் வடக்கு, அலங்காநல்லூர் தெற்கு** ஆகிய 4 ஒன்றியக் கழகங்களாக பிரிக்கப்படுகிறது. அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்களுக்கு, ஒன்றிய பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **அலங்காநல்லூர் கிழக்கு, அலங்காநல்லூர் மேற்கு, அலங்காநல்லூர் வடக்கு, அலங்காநல்லூர் தெற்கு** ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் கொண்டதாக அமையும்.

**அலங்காநல்லூர் கிழக்கு ஒன்றியம் :** 1.முடுவார்பட்டி, 2.தேவசேரி, 3.ஆதனூர்,4. பெரியஊர்சேரி, 5.பி.மேட்டுபட்டி , 6.வாவிடமருதூர், 7.அச்சம்பட்டி, 8.பண்ணைகுடி, 9.தண்டலை, 10.மணியஞ்சி, 11.கோட்டைமேடு ஆகிய 11 ஊராட்சிகள்.

**அலங்காநல்லூர் மேற்கு ஒன்றியம் :** 1.வடுகபட்டி, 2.தனிச்சியம், 3.அய்யங்கோட்டை, 4.கொண்டையம்பட்டி, 5.மேலசின்னனம்பட்டி, 6.கள்வேலிபட்டி, 7.பெரியஇலந்தைகுளம், 8.குட்டிமேய்க்கிபட்டி ஆகிய 8 ஊராட்சிகள்

**அலங்காநல்லூர் வடக்கு ஒன்றியம் :** 1.வலையபட்டி, 2.சத்திரவெள்ளாலபட்டி, 3. இராஜாக்காள்பட்டி, 4.66-மேட்டுப்பட்டி, 5.சேந்தமங்கலம், 6.கோடாங்கிபட்டி, 7. பாரைப்பட்டி, 8.வெள்ளையம்பட்டி, 9.மாணிக்கம்பட்டி ஆகிய 9 ஊராட்சிகள்

**அலங்காநல்லூர் தெற்கு ஒன்றியம் :** 1.டி.மேட்டுபட்டி, 2.தெத்தூர், 3.கல்லனை, 4.அழகாபுரி, 5.அய்யூர், 6.கீழச்சின்னனம்பட்டி, 7.எர்ரம்பட்டி, 8.சின்னஇலந்தைகுளம், 9.அ.கோவில்பட்டி ஆகிய 9 ஊராட்சிகள்

**ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு அமையப் பெற்ற **அலங்காநல்லூர் கிழக்கு, அலங்காநல்லூர் மேற்கு, அலங்காநல்லூர் வடக்கு, அலங்காநல்லூர் தெற்கு** ஆகிய ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**அலங்காநல்லூர் கிழக்கு ஒன்றியம்:**

பொறுப்பாளர் : **அ.தனராஜ்,** 66, மேட்டுப்பட்டி, சேந்தமங்கலம் (அ), பாலமேடு(வழி), வாடிப்பட்டி(தா) மதுரை மாவட்டம்.

பொறுப்பு குழு உறுப்பினர்கள் : **பெ.தனுஷ்கோடி**, பண்ணைகுடி, அச்சம்பட்டி(அ),மதுரை. **சோ.சுந்தராஜன்**, முடுவார்பட்டி,முடுவார்பட்டி(அ), மதுரை. **பெ.ராஜேந்திரன்**, வலசை, அலங்காநல்லூர் (அ), மதுரை. **க.காமாட்சி (எ) மணிமாறன்**, முடுவார்பட்டி, முடுவார்பட்டி(அ), மதுரை. **பொ.ராசு,ஆதனூர்**, முடுவார்பட்டி(அ), மதுரை. **இ.சரவணன்,** தண்டலை, குமாரம்(அ), மதுரை. **ப.பிரவின்,** 15 பி மேட்டுப்பட்டி, மேட்டுப்பட்டி(அ), மதுரை. **செல்வி தி.ரேகா,** தேவசேரி, முடுவார்பட்டி(அ), மதுரை.

**அலங்காநல்லூர் மேற்கு ஒன்றியம்**

பொறுப்பாளர் : **வி.அருண்குமார்,** கல்வேலிபட்டி(அ), வாடிப்பட்டி(தா), மதுரை.

பொறுப்பு குழு உறுப்பினர்கள் : **ச.குழந்தைவேல்,** கொண்டையம்பட்டி(அ),வாடிப்பட்டி, மதுரை. **ரா.ரமேஷ்,** கோவிலூர்(அ),மதுரை. **மு.அமுதன்,** வடுகபட்டி, தனிச்சியம்(அ),மதுரை. **பா.ஜெயப்பிரகாஷ்**, பெரிய இலந்தைகுளம்(அ),மதுரை. **ப.பெரியசாமி**, தனிச்சியம்(அ), மதுரை. **ரா.காமாட்சி,** கீழக்கரை, குட்டிமேக்கிபட்டி(அ), மதுரை. **மோ.அலக்ஸ்பாண்டியன்**, அய்யங்கோட்டை(அ),மதுரை. **பா.தேன்மொழி,** பெரியஇலந்தைகுளம் (அ), மதுரை.

**அலங்காநல்லூர் வடக்கு ஒன்றியம்**

பொறுப்பாளர் : **அ.முத்தையன்**, வெள்ளையம்பட்டி(அ), பாலமேடு(வழி), வாடிப்பட்டி(தா), மதுரை.

பொறுப்பு குழு உறுப்பினர்கள் : **அ.பழனி,** சேந்தமங்கலம்(அ)மதுரை. **அ.இளமாறன்**, வெள்ளையம்பட்டி, மதுரை. **ரா.சின்னராசு**, பாரைப்பட்டி. கோடங்கிபட்டி(அ).மதுரை. **பெ.பெரியகருப்பன்**, பொந்துகம்பட்டி, சேந்தமங்கலம்(அ),மதுரை. **வெ.நாகராஜன்**, ராஜாக்காள்பட்டி,பாலமேடு(வழி),மதுரை. **ரா.சிவக்குமார்**, மாணிக்கம்பட்டி, வெள்ளையம்பட்டி (அ), மதுரை. **இ.காயத்ரி,** லக்கம்பட்டி, சத்திரவெள்ளாளபட்டி(அ), வாடிப்பட்டி(தா), மதுரை. **சி.குணசேகரன்**, வலையபட்டி, சத்திரவெள்ளாளபட்டி(அ), வாடிப்பட்டி(தா), மதுரை.

**அலங்காநல்லூர் தெற்கு ஒன்றியம்**

பொறுப்பாளர் : **சா.பரந்தாமன்,** அ.புதுப்பட்டி(அ), வாடிப்பட்டி(தா), மதுரை.

பொறுப்பு குழு உறுப்பினர்கள் : **மு.நடராஜன்,** இடையபட்டி, எரம்பட்டி(அ),மதுரை. **மு.தங்கமணி,** காந்திகிராமம், கல்லணை(அ), மதுரை. **க.சுந்தர்ராஜன்,** எரம்பட்டி(அ), மதுரை, **மூ.வடிவேல்.** கொழிஞ்சிபட்டி. தெத்தூர்(அ), மதுரை. **து.மகேஷ்,** வைகாசிபட்டி, எரம்பட்டி(அ), மதுரை. **ம.சேகர்,** கீழச்சின்னம்பட்டி, எரம்பட்டி(அ), மதுரை. **பா.அபுதாஹிர்,** அய்யூர்(அ), மதுரை. **மு.ராதா கிருஷ்ணன்**, சின்னஇலந்தைகுளம், மரியம்மாள்குளம்(அ), வாடிப்பட்டி, மதுரை.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 15.07.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

# நாமக்கல் மாவட்டத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. நலத்திட்ட உதவிகள் வழங்கினார்!

நாமக்கல், ஜூலை. 17-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க .ஸ்டாலின் அவர்கள் கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில், "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமைத் தொடங்கி வைத்து, துறை சார்ந்த அரங்கில் மனுக்கள் பதிவு செய்வதைப் பார்வையிட்டு, மனுதாரர்களுடன் கலந்துரையாடினார்.

அதனைத் தொடர்ந்து, நாமக்கல் மாவட்டம் சின்ன முதலைப்பட்டி , பொட்டணம் பாச்சல் ஆகிய பகுதிகளில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் துவக்க விழா நடைபெற்றது. நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி, தலைமை தாங்கினார். நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் வி.எஸ்.மாதேஸ்வரன், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம், கு.பொன்னுசாமி மேயர் து.கலாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், ,மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என். ராஜேஸ்குமார் கலந்து கொண்டு "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமைத் தொடங்கி வைத்து, துறை சார்ந்த அரங்கில் மனுக்கள் பதிவு செய்வதைப் பார்வையிட்டு, பயனாளிகளுக்கு உடனடித் தீர்வாக அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

அப்போது அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் "உங்களுடன் ஸ்டாலின்" என்ற திட்டத்தினை கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் தொடங்கி வைத்துள்ளார். அதனடிப்படையில், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் மக்களின் குறைகளை தீர்க்கும் வகையில், உங்களின் வீட்டிற்கே வந்து, கேட்டறிந்து தீர்வு காணும் "உங்களுடன் ஸ்டாலின்" என்ற திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

**நாமக்கல் மாவட்டத்தில் 238 சிறப்பு முகாம்கள்!**

இத்திட்டத்தின் கீழ் நாமக்கல் மாவட்டத்தில் மொத்தம் 238 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளது. இந்த முகாம்களில் நகர்ப்புறபகுதிகளில் 13 அரசுத் துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 துறைகளைச் சார்ந்த 46 சேவைகளும் வழங்கப்படும். அத்துடன் முகாம்களுக்கு வருகைதரும் பொது மக்களின் உடல் நலனைப் பேணும் வகையில் மருத்துவ சேவைகளை வழங்க மருத்துவ முகாம்களும் நடத்தப்படும்.

அதனடிப்படையில் நாமக்கல் மாநகராட்சி சின்ன முதலைப்பட்டியில் நடைபெறும் முகாமில், முகாம் தொடங்கிய 1 மணி நேரத்தில் ஏறத்தாழ 600க்கும் மேற்பட்ட மனுக்கள் பெறப்பட்டுள்ளது. . கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்கான விண்ணப்பங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு, ஆய்விற்கு எடுத்து கொள்ளப்படும் என்றார். தொடர்ந்து

மனுக்கள் அளித்த பயனாளிகளுக்கு உடனடி தீர்வாக சாதி சான்றிதழ், வருமான சான்றிதழ், மருத்துவக் காப்பீட்டு அட்டை ஆகியவற்றினை வழங்கினார்.

இம்முகாமில், மாநகராட்சி ஆணையாளர் க.சிவக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் ரெ.சுமன், மாவட்ட வருவாய் அலுவலர் (சிப்காட்) மா.க.சரவணன், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.வடிவேல், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) கு.செல்வராசு, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) ச.பிரபாகரன், உதவி ஆணையர் (தொழிலாளர் நல வாரியம்) இந்தியா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



வேலூர் மாநகரம் சலவன் பேட்டைபகுதி தி.மு.க. இளைஞரணி சார்பில் முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா மற்றும் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு !என்ற தலைப்பில் தமிழக முதல்வர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நான்காண்டு சாதனை விளக்கப் பொதுக் கூட்டத்தில் மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. சிறப்புரை ஆற்றினார். உடன் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், கொள்கை பரப்பு துணை செயலாளர் வேலூர் ரமேஷ், பகுதி கழக செயலாளர் வி.ஜி.கே.சுந்தர விஜி, மண்டல குழு தலைவர்கள் வீனஸ் நரேந்திரன், யூசுப் கான்,இளைஞரணி அமைப்பாளர் இம்தியாஸ்கான் துணை அமைப்பாளர்கள் சுகேல், ராஜசேகர் , சரவணன் என்ற குட்டியப்பன், யுவராஜ், தினேஷ்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமினை காணொளிக் காட்சி வாயிலாகத் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, கள்ளக்குறிச்சி நகராட்சி, தனியார் மண்டபத்தில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் நேற்று முன்தினம் (15.07.2025) தொடங்கி வைத்து, மனுக்கள் பதிவு செய்யும் இடத்தினை பார்வையிட்டு, பொதுமக்களிடமிருந்து பல்வேறு துறை சார்ந்த பதிவு செய்யப்பட்ட கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டார்கள், நிகழ்வில் ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜே.மணிக்கண்ணன் ஆகியோர் உடன் உள்ளார்கள்.